# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2013.12.30

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 18/2013**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**2014 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான விசேட முற்பணக் கொடுப்பனவு வழங்கல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான 2013.21.24 ஆம் திகதிய 34/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, 2014 ஆம் ஆண்டில் 2500/= ரூபாவுக்கு மேற்படாத தொகையொன்றினை விசேட முற்பணக் கொடுப்பனவாக பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த முற்பணக் கொடுப்பனவானது 2014.01.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2014.02.28 ஆம் திகதி முடிவுறுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக 34/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/10/1/1

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 34/2013

எனது இல: EST-7/LOANS/04/0207
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07

2013.12.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம்

2006.11.25 ஆம் திகதிய 20/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் 2006 ஆம் ஆண்டு குறிப்பிடப்படும் இடங்கள் அனைத்திலும் 2013 ஆம் ஆண்டினைப் பதிலீட்டும், 2007 ஆம் ஆண்டு குறிப்பிடப்படும் இடங்கள் அனைத்திலும் 2014 ஆம் ஆண்டின் பதிலீட்டும், மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 2500/= இனை விட மேற்படாத தொகையொன்றினை விசேட முற்பணமாக வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. இந்த முற்பணக் கொடுப்பனவானது 2014.01.01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டு 2014.02.28 ஆம் திகதியன்று முடிவுறுத்தப்படுதல் வேண்டும். 2014.02.28 ஆம் திகதிக்குப் பின்னர் கொடுப்பனவுகளெதுவும் மேற்கொள்ளப்படுதலாகாது.

04. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு